# 10 - STD முதல் இடைப் பருவத் தேர்வு - 2026

பதிவு எண்.

## தமிழ்

நேரம்: 1:30 மணி மதிப்பெண்கள்: 50

### பகுதி - I

**I. பொருத்தமான விடையை குறியீட்டுடன் எழுதுக** 7 x 1 = 7

1. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் எது?
அ) இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்து விடாது.
இ) இகழ்ந்தால் இறந்து விடாது என்மனம் ஈ) என்மனம் இறந்து விடாது இகழ்ந்தால்
2. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு
அ) இந்தியா ஆ) மலேசியா இ) ஜப்பான் ஈ) அமெரிக்கா
3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்-
அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+ தமிழ்+நா இ) எம் + தமிழ்+நா ஈ) எந்தம் + தமிழ் +நா
4. பரிபாடல் அடியில் 'விசும்பில், இசையில்' ஆகிய சொற்கள் குறிப்பவை எவை?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானொலியில், பேரொலியில்
இ) வானத்தில், பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்.
5. 'மொழிஞாயிறு' என்று அழைக்கப்படுபவர்
அ) கிருந்தையார் ஆ) ப.சிங்காரம் இ) பிரபஞ்சன் ஈ) தேவநேயப் பாவாணர்.
6. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் - இத்தொடர் குறிப்பிடுவது
அ) இலையும் சருகும் ஆ) தாளும் ஓலையும்
இ) சருகும் சண்டும் ஈ) தோகையும் சண்டும்.
7. கண்ணதாசன் சாகித்திய அகாதெமி விருது பெற்ற புதினம்.
அ) புயலிலே ஒரு தோணி ஆ) சேரமான் காதலி இ) பிரம்மம் ஈ) கடற்கூத்து.

### பகுதி - II

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி :** 5 x 2 = 10

8. சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களை குறிப்பிடுக
9. மென்மையான மேகங்கள், துணிச்சலும் கருணையும் கொண்டு வானில் செய்யும் நிகழ்வுகளை எழுதுக
10. பலகை என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
11. கிளர்ந்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக
12. கலைச்சொல் தருக (i) Conversation ii) Tornado
13. இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க
1) கொள் -கோள் 2) கொடு - கோடு
14. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றி இணைத்து எழுதுக.
i) கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.
ii) பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார்.போட்டித் தேர்வில் வென்றார்.

### பகுதி - III பிரிவு - அ

**III. ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.** 1 x 3 = 3

15. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
16. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி கூறுக.

### பகுதி - III பிரிவு - ஆ

**ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்** 1 x 3 = 3

17. அன்னை மொழியே பாடலை அடிபிறழாமல் எழுதுக.
18. உரைபத்தியை படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 15 ஐ உலக காற்று நாளாகக் கொண்டாடுகிறோம். ஒரு மணித்துளிக்கு 12 முதல் 18 முறை மூச்சுக்காற்றாய் நீங்கள் வெளிவிடும் கரியமில வளியை எடுத்துக்கொண்டு உங்கள் நுரையீரலுக்குத் தேவையான உயிர் வளியைத் தரும் மரங்களை வளர்க்க வேண்டும். வளி மிகின் வலி இல்லை என்றார் ஐயூர் முடவனார்.

**வினாக்கள்:**

1. ஒரு மணித்துளிக்கு எத்தனை முறை மூச்சுக்காற்றை வெளியிடுகிறோம்?
2. உலக காற்று நாள்------------------------
3. இந்த உரைப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.

## பகுதி - III பிரிவு - இ

**ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்** **1 x 3 =3**

19. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இதுபோல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களை தொடர்களில் அமைக்க.
20. வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களிடம் சுற்றுச்சூழல் பற்றிய பாடலைப் பாடிக் காட்டினார் இதை மாணவர்கள் கவனமாகக் கேட்டுப் பாடினர். மாணவர்கள் கேட்ட பாடலில் இருந்து ஆசிரியர் சிறு வினாக்களைக் கேட்டார். நன்றாக எழுதுபவருக்குப் பரிசு உள்ளது என்றார் ஆசிரியர். இப் பத்தியில் உள்ள தொகாநிலைத் தொடர்களைக் கண்டறிக.

## பகுதி - IV

**IV எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்** **3 x 4 = 12**

21. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



22. இன்சொல், தீயசொல் பேசுவதனால் ஏற்படும் நன்மை தீமைகளை எழுதுக.
23. மாநில அளவில் நடைபெற்ற கலைத்திருவிழா போட்டியில் பங்கேற்று கலையரசன் பட்டம் பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.
24. எண் 77, பாரதி நகர், திருப்பத்தூர் மாவட்டத்தில் வசிக்கும் குமார் என்பவரின் மகன் ராகுல் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை ராகுல் எனக்கருதி கொடுக்கப்பட்ட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் படிவத்தை நிரப்புக

## பகுதி - V

**V. அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **2 x 6 = 12**

25. (அ) நாட்டு வளமும் சொல்வளமும் தொடர்புடையது என்பதை பாவாணர் வழி நின்று விளக்குக.

**(அல்லது)**

(ஆ) காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக.

26. (அ) புயலிலே ஒரு தோணி 'கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணிபடும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

**(அல்லது)**

(ஆ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் சேர்த்த பெருமை, தகைசால் தமிழன்னையைச்சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்அன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணிபாடி,கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள் இக்கருத்தை கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2026

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 1.30 மணி

பகுதி - 1

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 7 x 1 = 7

1. தமிழ் காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள்.
   - இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது.
   அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
   இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
2. மகிழுந்து வருமா? - எவ்வகைத்தொடர்?
   அ) விளித்தொடர் ஆ) எழுவாய்த் தொடர்
   இ) வினையெச்சத் தொடர் ஈ) பெயரெச்சத் தொடர்
3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
   இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
4. வேர்க்கடலை மிளகாய் விதை மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிப்பது
   அ) குலைப் பெயர் வகை ஆ) மணிப் பெயர் வகை
   இ) கிளைப் பெயர் வகை ஈ) இலைப் பெயர் வகை
5. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைந்தது
   அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
   இ) உவம உருபு ஈ) உரிச்சொல்
6. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது. - இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும், வினையாலணையும் பெயரும் முறையே
   அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய
   இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்
7. கண்ணதாசனின் இயற்பெயர் ______.

பகுதி - 2

**II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 4 x 2 = 8

8. மன்னுஞ் சிலம்பே ! மணிமேகலை வடிவே !
   முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே !
   - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
9. இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க :
   அ) கொடு - கோடு
   ஆ) விதி - வீதி
10. "எழுது என்றாள்" என்பது விரைவு காரணமாக "எழுது எழுது என்றாள்" என அடுக்குத்தொடரானது. "சிரித்துப் பேசினார்" என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?
11. பலகை என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
12. சொல் வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
13. கலைச்சொல் எழுதுக :
    அ) Consonant ஆ) Storm

## பகுதி - 3

**III. மனப்பாடப் பகுதி.** **1 x 3 = 3**

14. அன்னை மொழியே - எனத் தொடங்கும் பாடலை அடிமாறாமல் எழுதுக.

**IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **3 x 3 = 9**

15. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

16. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

17. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இதுபோல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

18. மொழிபெயர்க்க :

அ) If you talk to a man in a language he understands, that goes to his head. if you talk to him in his own language, that goes to his heart. - Nelson Mandela.

ஆ) Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going. - Rita Mae Brown.

## பகுதி - 4

**V. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக :** **1 x 5 = 5**

19.



20. விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை படிவத்தை நிரப்புக. **1 x 5 = 5**

21. அ) மாவட்ட அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழியை வாழ்த்தி மடல் ஒன்று வரைக. **1 x 5 = 5**

*(அல்லது)*

ஆ) நூலக வசதி வேண்டி பொது நூலகத் துறை இயக்குநர் அவர்களுக்குக் கடிதம் எழுதுக.

## பகுதி - 5

**VI. ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்க.** **1 x 8 = 8**

22. அ) குமரிக்கடல் முனையையும், வேங்கடமலை முகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு பிள்ளைதமிழ் பேசி, சதகம் அமைத்து, பரணி பாடிய கலம்பகம் கண்டு உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம் மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

- இக்கருத்தைக் கருவாகக் கொண்டு "சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

*(அல்லது)*

ஆ) நாட்டு வளமும் சொல் வளமும் தொடர்புடையது என்பதை பாவாணர் வழிநின்று விளக்குக.

********

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2026

நேரம் : 1.30 மணி

## தமிழ்

மொத்த மதிப்பெண்கள் : 50

### பகுதி - I

I. சரியான விடையைத் தெரிவு செய்து குறியீட்டுடன் எழுதுக. 10X1=10

1. வேர்க்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றை குறிப்பது
   (அ) குலைப்பெயர் வகை (ஆ) மணிப்பெயர் வகை (இ) கிளைப்பெயர் வகை (ஈ) இலைப்பெயர்கள்
2. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
   (அ) எந் + தமிழ் + நா (ஆ) எந்த + தமிழ் + நா (இ) எம் + தமிழ் + நா (ஈ) எந்தம் + தமிழ் + நா
3. *காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்* நிலத்துக்கு நல்ல உரங்கள் இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது
   (அ) இலையும் சருகும் (ஆ) தோகையும் சண்டும் (இ) தாளும் ஓலையும் (ஈ) சருகும் சண்டும்
4. பரிபாடல் அடியில் 'விசும்பில் இசையில்' ஆகிய சொற்கள் குறிப்பவை எவை?
   (அ) வானத்தையும் பாட்டையும் (ஆ) வான்வெளியில் பேரொலியில்
   (இ) வானத்தில் பூமியையும் (ஈ) வானத்தையும் பேரொலியையும்
5. ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு ஒரு பொருளையும் தந்தால் அது --------- எனப்படும்.
   (அ) தனிமொழி (ஆ) தொடர்மொழி (இ) பொதுமொழி (ஈ) முதுமொழி
6. காலக்கணிதம் – கவிதையில் இடம்பெற்ற தொடர் எது?
   (அ) இகழ்ந்தால் என் மனம் இறந்துவிடாது (ஆ) என் மனம் இகழ்ந்தால் இறந்து விடாது
   (இ) இகழ்ந்தால் இறந்து விடாது என் மனம் (ஈ) என் மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்
7. நாடும் மொழியும் நமது இருகண்கள் என்று கூறியவர் யார்?
   (அ) பாரதிதாசன் (ஆ) கவிமணி (இ) பாரதியார் (ஈ) கண்ணதாசன்
8. பீடு என்பதன் பொருள் -----------
   (அ) சிறப்பு (ஆ) யுகம் (இ) வானம் (ஈ) திரண்டு
9. "வளிமிகின் வலி இல்லை" என்று கூறியவர்
   (அ) தனி நாயக அடிகள் (ஆ) ஐ யூர் முடவனார்
   (இ) இளநாகனார் (ஈ) வெண்ணிக்குயத்தியார்
10. விடைக்கேற்ற வினா அமைக்க.
    கிழக்கிலிருந்து வீசும் காற்று கொண்டல் என்று அழைக்கப்படுகிறது.

### பகுதி - II

II. எவையேனும் நான்கு வினாவிற்கு மட்டும் விடையளிக்க வேண்டும். 4x2=8

11. "பலகை" என்பதைத் தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
12. சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
13. தமிழர்கள் வீசுகின்ற திசையைக் கொண்டு காற்றுக்கு எவ்வாறு பெயர் சூட்டியுள்ளனர்.

14.மன்னுஞ்சிலம்பே! மணிமேகலை வடிவே முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! – இவ்வடியில் இடம்பெற்றுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

15. குலைப்பெயர் வகைகள் நான்கினை எழுதுக.

பகுதி – III

**III. ஏதேனும் மூன்று வினாவிற்கு மட்டும் விடையளி.** 3X3=9

16. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

17. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையென பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

18. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இது போல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

19. தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

பகுதி – IV

**IV.மனப்பாடப் பாடலை எழுதுக.** 1X3=3

20. "அன்னைமொழியே" ............ எனத் தொடங்கும் பாடலை எழுது.

பகுதி – V

**V. ஏதேனும் இரண்டு வினாவிற்கு மட்டும் விடையளி.** 2X2=4

21. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைக்கவும்.

அ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட நாள் வாழ்நாள் பெற்றார்.

ஆ) பொது அறிவு நூல்களைத் தேடிப்படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.

22.கலைச்சொல் தருக.

அ) Moholingul ஆ) Conversation

23.எண்ணுப் பெயர்களைக் கண்டுபிடித்துத் தமிழ் எண்களில் எழுதுக.

அ) ஓட்டுநர் உரிமம் எடுக்கும் வயது என்ன?

ஆ) தமிழ் எழுத்துகள் மொத்தம் எத்தனை?

பகுதி – VI

**VI. பின்வரும் வினாக்களுக்கும் விடையளி.** 2X4=8

24.அ) மாநில அளவில் நடைபெற்ற கலைத்திருவிழா போட்டியில் பங்கேற்று கலையரசன் பட்டம் பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் கிராமத்திற்கு நூலக வசதி வேண்டி பொது நூலகத்துறை இயக்குநர் அவர்களுக்கு கடிதம் வரைக.

25.பார்த்திபன் வசந்தி என்போரின் மகள் தமிழ்ச்செல்வி *விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்* உறுப்பினராக சேர உள்ளார். இணைய வழி மூலம் உரிய விண்ணப்பத்தை பதிவு செய்க.

பகுதி – VII

**VII. விரிவான விடையளிக்கவும்.** 1X8=8

26.அ) "சான்றோர் வளர்த்த தமிழ்" – கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக.

BLESSING TUITION & TUTORIAL CENTRE
No;12, Ganesh Apartment, Trust Square street, Medavakkam, Ayanavaram, ch-12
ISO 9001 : 2015 Certified Institution

# 10th - தமிழ்
## First Mid Term Important
## 2026 - 2027

2 மதிப்பெண் :-

1. பலகை என்பதைத் தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்தி காட்டுக.
2. சொல் வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
3. தமிழர்கள் வீசுகின்ற திசையைக் கொண்டு காற்றுக்கு எவ்வாறு பெயர் சூட்டியுள்ளனர்
4. மன்னும் சிலம்பே! மணிமேகலை வடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! - இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
5. கொள்வோர் கொள்க குரைப்போர் குரைக்க உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது - பாடல் அடிகளில் உள்ள மோனை எதுகைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

3 மதிப்பெண் :

1. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இது போல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
2. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு கூட்டுவன யாவை?
3. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை, எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

9486017820 C 8148814326 blessingtuitionandtutorial@gmail.com
www.blessingtuition.com
blessingtuitionandtutorial
blessingtuitionandtutorial

4. அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது - இக்கூற்றில் அடிக்கோடிட்ட சொற்களைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

5 மதிப்பெண் :

1. மாநில அளவில் நடைபெற்ற 'கலைத்திருவிழா' போட்டியில் பங்கேற்று 'கலையரசன்' பட்டம் பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.
2. பணி வாய்ப்பு வேண்டித் தன் விவரப் படிவத்தை நிரப்புதல் தேர்வன் தன்னை வேந்தனாக கருத்தில் கொண்டு நடப்பசு பணிக்கு தன்விவரம் பூர்த்தி செய்க
3. காற்று மாசு பாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக.
4. மாவட்ட அளவில் 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலாக கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தோ

8. மதிப்பெண் :

1. நாட்டுவளமும் சொல்வளமும் தொடர்புடையது என்பதனை பாவாணர் வழிநின்று விளக்குக.
2. 'பிரும்மம்' கதை உணர்த்தும் பிற உயிர்களைத்தும் உயிர் போல் நேசிக்கும் பண்பினை விவரிக்க.
3. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணிபடும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன.

Blessing Tuition & Tutorial Centre
ISO 9001 : 2015
Address ; No 12,Ganesh Apartment, Trust Square Street,Ayanavram ,ch - 12

## 10 ஆம் வகுப்பு

## முதல் இடைப் பருவத் தேர்வு

## முக்கிய வினாக்கள் 2026 - 27

## பாடம் 1

### அன்னை மொழியே

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

**அழகார்ந்த செந்தமிழே!**

**அன்னை மொழியே! அழகாரார்ந்த செந்தமிழே!**
**முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!**
**கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்**
**மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!**

**தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!**
**இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!**
**மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!**

### காலக் கணிதம்

- கண்ணதாசன்

**மாற்றம் எனது மானிடத் தத்துவம்;**
**மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!**
**எவ்வவெவை தீமை எவ்வெவை நன்மை**
**என்ப தறிந்து ஏகுமென் சாலை!**
**தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;**
**தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!**
**கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!**
**உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;**
**நானே தொடக்கம்; நானே முடிவு;**
**நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!**

#### குறுவினா

1. 'பலகை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
2. "மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" – இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
3. சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

#### சிறுவினா

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
2. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இது போல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

#### நெடுவினா

1. நாட்டுவளமும் சொல்வளமும் தொடர்புடையது என்பதை பாவாணர் வழிநின்று விளக்குக.
2. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

#### மொழிபெயர்ப்பு

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart – Nelson Mandela
2. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going – Rita Mae Brown

#### படிப்போம்; பயன்படுத்துவோம்!

Vowel – உயிரெழுத்து   Consonant – மெய்யெழுத்து
Homograph – ஒப்பெழுத்து
Monolingual - ஒரு மொழி
Conversation – உரையாடல்
Discussion – கலந்துரையாடல்

## பாடம் 2

#### குறுவினா

1. மென்மையான மேகங்கள், துணிச்சலும் கருணையும் கொண்டு வானில் செய்யும் நிகழ்வுகளை எழுதுக.
2. தமிழர்கள், வீசுகின்ற திசையைக் கொண்டு காற்றுக்கு எவ்வாறு பெயர் சூட்டியுள்ளனர்?

#### சிறுவினா

1. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

#### நெடுவினா

1. காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக.
2. "பிரும்மம்" கதை உணர்த்தும் பிற உயிர்களைத் தம் உயிர்போல் நேசிக்கும் பண்பினை விவரிக்க.

#### மொழி பெயர்க்க.

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

## படிப்போம்; பயன்படுத்துவோம்!

Storm – புயல்
Tornado – சூறாவளி
Tempest - வன்புயல்
Land Breeze - நிலக்காற்று
Sea Breeze - கடற்காற்று
Whirlwind – சுழல்காற்று

### நூல் வெளி

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி 1) தொகுப்பிலிருந்து இருவேறு தலைப்பில் உள்ள பாடல்கள் (தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்) பாடமாக இடம்பெற்றுள்ளன. தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பியவர், துரை. இராசமாணிக்கம் என்ற இயற்பெயர் கொண்ட பெருஞ்சித்திரனார்.

இவர் உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள் முதலிய நூல்களைப் படைத்துள்ளார். இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை, தமிழுக்குக் கருவூலமாய் அமைந்துள்ளது. இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

"சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் – என்றன்
சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்"
என்றுரைக்கும் க.சச்சிதானந்தன் அவர்களின் பாடலடி

### தெரியுமா?

உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே. மாநாட்டுக்குரிய அம்முதல் மொழியும் தமிழே.

பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார்

அடி மரத்தினின்று பிரியும்
மாபெரும் கிளை கவை எனப்படுகிறது.
கவையில் இருந்து பிரிவது கொம்பு (அ) கொப்பு.
கொம்பில் இருந்து பிரிவது சிறு கிளை.
கிளையில் இருந்து பிரிவது சினை.
சினையில் இருந்து பிரிவது போத்து.
போத்தில் இருந்து பிரிவது குச்சி.
குச்சியில் இருந்து பிரிவது இணுக்கு
என்று பாவாணர் எடுத்துக்காட்டியுள்ளார்.

### நூல் வெளி



மொழிஞாயிறு என்றழைக்கப்படும் தேவநேயப் பாவாணரின் "சொல்லாய்வுக் கட்டுரைகள்" நூலில் உள்ள தமிழ்ச்சொல் வளம் என்னும் கட்டுரையின் கருத்து பாடமாகத் தரப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் சில விளக்கக் குறிப்புகள் மாணவர்களின் புரிதலுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளன.

பல்வேறு இலக்கணக் கட்டுரைகளையும் மொழியாராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதிய பாவாணர், தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர். செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர்; உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.

### நூல் வெளி

'காலக்கணிதம்' என்னும் இப்பாடப்பகுதி, கண்ணதாசன் கவிதைகள் என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

'முத்தையா' என்னும் இயற்பெயரைக் கொண்ட கண்ணதாசன் இன்றைய சிவகங்கை மாவட்டத்தின் சிற்றூரான சிறுகூடல்பட்டியில் பிறந்தவர். இவரது பெற்றோர் சாத்தப்பன் – விசாலாட்சி ஆவர். 1949ஆம் ஆண்டு "கலங்காதிரு மனமே" என்ற பாடலை எழுதி, இவர் திரைப்படப் பாடலாசிரியரானார். திரையுலகிலும் இலக்கிய உலகிலும் சிறந்து விளங்கியவர் கண்ணதாசன். இவர் சிறந்த கவியரங்கக் கவிஞராகவும் பேச்சாளராகவும் திகழ்ந்தவர்; தனது திரைப்படப் பாடல்கள் வழியாக எளிய முறையில் மெய்யியலை (Philosophy) மக்களிடையே கொண்டு சேர்த்தவர்; சேரமான் காதலி என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். இவர் தமிழ்நாடு அரசின் அரசவைக் கவிஞராகவும் ஆக்கப்பட்டுச் சிறப்புப்பெற்றுள்ளார்.

## தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடு

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| வினை, பெயர்த் தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும் | தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும் |
| காலம் காட்டாது | காலம் காட்டும் |
| படர்க்கைக்கே உரியது | மூவிடத்திற்கும் உரியது |
| எ. கா. பாடுதல், படித்தல் | எ. கா. பாடியவள், படித்தவர் |


### கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து நயம் பாராட்டுக.

கவிதையில் உள்ள திரண்ட கருத்து, பொருள் நயம், சொல் நயம், சந்த நயம், தொடை நயம், அணி நயம் ஆகியவை இடம்பெற வேண்டும்.

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!

கா.நமச்சிவாயர்.

### காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை – இணையவழி விண்ணப்பப்பதிவு**

முழுப்பெயர் : ______________________

பாலினம் : ______________________

கைபேசி எண் : ______________________

மின்னஞ்சல் முகவரி : ______________________

பிறந்த தேதி : ______________________

இரத்த வகை : ______________________

தந்தையின் பெயர் : ______________________

தாயாரின் பெயர் : ______________________

தொடர்பு முகவரி

| கதவு எண் / தெருவின் பெயர்/ கிராமம் (அல்லது) நகரத்தின் பெயர் | மாவட்டம் | அஞ்சல் குறியீட்டு எண் |
|---|---|---|
| | | |

நிரந்தர முகவரி

| கதவு எண் / தெருவின் பெயர்/ கிராமம் (அல்லது) நகரத்தின் பெயர் | மாவட்டம் | அஞ்சல் குறியீட்டு எண் |
|---|---|---|
| | | |

மாநிலம் : தமிழ்நாடு இனம் : இந்தியன்

ஆதார் எண் : XXXX XXXX XXXX

உங்கள் புகைப்படத்தைப் பதிவேற்றவும் :

கடவுச்சொல் : XXXXXXXXXXXXXXX

கடவுச்சொல்லை உறுதிப்படுத்தவும் : XXXXXXXXXXXXXXX

**மாநில அளவில் நடைபெற்ற 'கலைத்திருவிழா' போட்டியில் பங்கேற்று 'கலையரசன்' பட்டம் பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

காந்தி தெரு,
10.06.2025

அன்புள்ள நண்பன் அமுதனுக்கு,

வணக்கம். நான் நலமாக இருக்கின்றேன். நீ நலமாக இருக்கின்றாயா? இல்லத்தில் அனைவரும் நலமாக உள்ளார்களா என்பதை அறிய ஆவலுடன் உள்ளேன். உன்னிடம் இருக்கின்ற கலைத்திறமைகளை உடனிருந்து நான் பார்த்திருக்கின்றேன். பல போட்டிகளில் கலந்துகொண்டு நீ பரிசுகளைப் பெற்றுள்ளாய்.

தமிழ்நாடு அரசு நடத்திய கலைத்திருவிழாப் போட்டிகளிலும் கலந்துகொண்டு மூன்று போட்டிகளில் மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளாய். இதன் காரணமாகக் 'கலையரசன்' பட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கைகளால் பெற்றுள்ளாய். உனக்குக் கிடைத்த பெருமையால் நண்பர்கள் அனைவருமே பெருமையும் ஊக்கமும் அடைகிறோம். உன்னைப் போல பட்டங்கள்பெற முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

இதைப்போல, வரக்கூடிய பல போட்டிகளிலும் கலந்துகொண்டு இன்னும் பல பரிசுகளைப் பெற உளமார வாழ்த்துகின்றேன். கோடை விடுமுறையில் நமது கிராமத்தில் சந்திப்போம்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள நண்பன்,
மா. குறளரசன்.

உறைமேல் முகவரி
பெறுநர்
ஆ. தமிழ்ச்செல்வன்,
50, அன்னை இல்லம்,
கபிலர் தெரு,
கோயமுத்தூர் 641 001.

**நூல் வெளி**



பிரபஞ்சனின் இயற்பெயர் வைத்தியலிங்கம். இவர் புதுச்சேரியைச் சேர்ந்தவர்; சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை எனப் பல்வேறு இலக்கியத் தளங்களில் இயங்கி வந்தவர். பிரும்மம் சிறுகதை 'பிரபஞ்சன் சிறுகதைகள்' என்ற தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ளது. இவரின் 'வானம் வசப்படும்' என்ற வரலாற்றுப் புதினம் 1995ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றது. இவருடைய படைப்புகள் தெலுங்கு, கன்னடம், இந்தி, பிரெஞ்சு, ஆங்கிலம், ஜெர்மன் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## இலக்கணக் குறிப்பு

ஊழ்ஊழ் – அடுக்குத் தொடர்
வளர்வானம் – வினைத்தொகை
வாரா (ஒன்றன்)– ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
செந்தீ – பண்புத்தொகை

## பகுபத உறுப்பிலக்கணம்

கிளர்ந்த – கிளர் + த் (ந்) + த் + அ

கிளர் – பகுதி
த் – சந்தி
த்(ந்) – ந் ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

**இல்நுழைகதிர்**

இந்த அண்டப் பெருவெளியில் நம் பால்வீதி போன்று எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன. வெளியே நின்று பார்த்தோமெனில், சிறுதூசிபோலக் கோடிக்கணக்கான பால்வீதிகள் தெரியும். அமெரிக்க வானியல் வல்லுநர் எட்வின் ஹப்பிள் 1924இல் நம் பால்வீதி போன்று பல பால்வீதிகள் உள்ளன என்று நிரூபித்தார்.

1300 ஆண்டுகளுக்குமுன் மாணிக்கவாசகர் திருஅண்டப் பகுதியில் இவ்வாறு எழுதுகிறார்...

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
.....................................................
சிறிய ஆகப் பெரியோன் தெரியின்" (திருவாசகம் 3 - 1 - 6)

அண்டப் பகுதிகளின் உருண்டை வடிவும், ஒப்பற்ற வளமையான காட்சியும் ஒன்றுக்கு ஒன்று ஈர்ப்புடன் நின்ற அழகினைச் சொல்வது எனின், அவை நூறுகோடிக்கும் மேல் விரிந்து நின்றன. இல்லத்துள் நுழையும் கதிரவனின் ஒளிக்கற்றையில் தெரியும் தூசுத் துகள்போல அவை நுண்மையாக இருக்கின்றன.

## தொகாநிலைத் தொடர்கள்




### உங்கள் கிராமத்திற்கு நூலக வசதி வேண்டி பொது நூலகத்துறை இயக்குநர் அவர்களுக்குக் கடிதம் வரைக.

பூம்பாறை,
10.07.2025

அனுப்புநர்
செ. தமிழரசன்,
50, அன்னை இல்லம்,
காந்தி தெரு,
பூம்பாறை,
திண்டுக்கல் மாவட்டம் 625 001.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் அவர்கள்,
தமிழ்நாடு பொது நூலக இயக்குநரகம்,
சென்னை 600 002.

ஐயா,

பொருள் : நூலக வசதி வேண்டுதல் – சார்பு.

வணக்கம். கற்றறிந்த சமுதாயத்தை உருவாக்கும் தங்கள் நூலகத்துறைக்கு எனது வாழ்த்துகள். எங்கள் கிராமத்தில் 1000 குடும்பங்களும் 2800 மக்களும் வசித்து வருகின்றனர். மேலும், எங்கள் கிராமத்தில் உயர்கல்வி முடித்து அரசு போட்டித் தேர்வுகளுக்குப் படிப்பவர்கள் நூற்றுக்கணக்கில் உள்ளனர். நாங்கள் தேர்விற்குப் படிப்பதற்காக இருப்பிடத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நூலகத்திற்கு நாள்தோறும் சென்று வருகின்றோம்.

எங்கள் கிராமத்தில் கிளை நூலகம் அமைத்தால் எங்கள் கிராம மக்களுக்கும் எங்களைப்போன்று தேர்வுகளுக்குப் படிப்பவர்களுக்கும் மிகுந்த பயனைத்தரும். எனவே, எங்கள் கிராமத்தில் கிளை நூலகம் அமைத்திட ஆவன செய்யுமாறு தங்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
செ. தமிழரசன்.

உறைமேல் முகவரி
பெறுநர்
பொது நூலக இயக்குநர் அவர்கள்,
தமிழ்நாடு பொது நூலக இயக்குநரகம்,
சென்னை 600 002.

### பணி வாய்ப்பு வேண்டித் தன்விவரப் படிவத்தை நிரப்புதல்

1. பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த நாள் மற்றும் வயது :
4 தேசிய இனம் :
5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
6. வீட்டு முகவரி :
7. தொலைபேசி / அலைபேசி எண் :
8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :
9. தாய்மொழி :
10. பயின்ற மொழிகள் :
11. தட்டச்சு :
12. கணினி :

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதிகூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் ________________ பணியினைத் தந்தால் எனது பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,

# 10TH STD TAMIL

## 2027 MARCH PUBLIC EXAM

## IMPORTANT 8 MARK QUESTIONS



### வினா எண்: 43 – நெடுவினாக்கள் (எட்டு மதிப்பெண்கள்)

1. நாட்டுவளம் சொல்வளம் தொடர்புடையது என்பதை பாவணர் வழிநின்று விளக்குக.
2. போராட்டக் கலைஞர் – பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக் கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளை கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.
3. காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக.
4. சங்ககாலத் தமிழர்களின் விருந்தோம்பல் பண்பைச் சான்றுகளுடன் விளக்குக.
5. தமிழின் இலக்கிய வளம் – கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் – அறிவியல் கருத்துகள் – பிற துறைக் கருத்துகள் தமிழுக்குச் செழுமை மேற்ற கொண்ள் குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை என்ற தலைப்பில் வா.இ. சுப்பிரமணியம் நடத்திய கருத்தரங்கு ஒன்றுக்கு நடிப்புக் கட்டுரை எழுதுக.
6. உங்கள் இல்லத்திற்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.
7. நாடு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் "மாணவர் பருவமும் நாட்டுப்பற்றும்" என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

தமிழ் கற்போம்
தமிழால் உயர்வோம்
தமிழால்
உலகை வெல்வோம்!



### வினா எண்: 44 – விரிவானம் – நெடுவினாக்கள் (எட்டு மதிப்பெண்கள்)

1. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வர்ணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச்சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?
2. "பிழும்மம்" கதை உணர்த்தும் பிற உயிர்களைத் தம் உயிர்போல் நேசிக்கும் பண்பினை விவரிக்க.
3. அன்னமையார் என்றும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைகூறிக் கொண்டு விவரிக்க.
4. "கற்தை நன்றே கற்தை நன்றே"
   -பிச்சை புகினும் கற்தை நன்றே"
   என்கிறது வெற்றிவேற்கை.
   மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம், மேரியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்கள் கருத்துக்களை விவரிக்க.
5. பாய்ச்சல் கதையின் மையக்கருத்தைக் குறிப்பிட்டுக் கதையைச் சுருக்கி எழுதுக.



### வினா எண்: 45 – கட்டுரை – நெடுவினாக்கள் (எட்டு மதிப்பெண்கள்)

1. "சான்றோர் வளர்ந்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.
2. பள்ளி ஆண்டு விழா மலருக்காக, நீங்கள் நாளிதழில் படித்த / கதை / கட்டுரை / சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.
   குறிப்பு:
   நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் – மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் – நூல் கட்டமைப்பு – சிறப்புக் கூறு – நூல் ஆசிரியர்.
3. உங்கள் பகுதியில் நடைபெறும் கலைத்திருவிழாவிற்கு சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக எழுதுக.
4. "சாலைப் பாதுகாப்பு" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.
   குறிப்பு:
   முன்னுரை – சாலை விதிகளை அறிவோம் – உயிர்த் ஒட்டுநர்களான நெறிகள் – விபத்துக்கான காரணங்கள் – தேவையாண விழிப்புணர்வு – நம் கடமை – முடிவுரை.
5. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பு ஒன்று தருக.
   குறிப்பு:
   முன்னுரை – தமிழகத் தந்த தலைப்புலவர் – நாட்டுப்பற்று – மொழிப்பற்று – பொதுவாழ்வில் தூய்மை – எளிமை – மக்கள் பணியே மகத்தான பணி – முடிவுரை.




☑ EXAM
☑ SUCCESS
☑ PLAN TODAY
☑ STUDY TODAY
SUCCESS TOMORROW

தரம் மிக்க கல்வி! சிறந்த எதிர்காலம்!

- அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்
- தனிப்பட்ட கவனம்
- முழுமையான பாடப்புத் திட்டம்
- மாதந்தோறும் தேர்வு
- சந்தேக தீர்வு வகுப்புகள்
- 100% முடிவு தரும் பயிற்சி

ADMISSION OPEN FOR 2026 - 2027

LIMITED SEATS HURRY UP!

BLESSING TUITION & TUTORIAL CENTRE

Email: blessingtuitionandtutorial@gmail.com
Website: blessingtuitioncenter.com
Phone Number: 9486017820

Follow Us On
YouTube Facebook Instagram

YOUR SUCCESS IS OUR MISSION

Learning Today... Leading Tomorrow...! Blessing Tuition - The Key to Your Bright Future!